# தூதன்

தூதன்-29 | ஆகஸ்ட் - 2020 | தூது-8

அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.
மத்தேயு 20:16




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 03 |
| உதவி ஆயரம்மா மடல் – ஃபுஜைரா | 05 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 07 |
| உதவி ஆயரம்மா மடல் – இராஸ் அல் கைமா | 09 |
| செயலர் மடல் | 11 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 13 |
| அறிந்து கொள்வோம் | 14 |
| திருச்சபை ஜெபநாள் | 16 |
| ராகேல் | 18 |
| தெரிந்துகொள்வோம் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| Health Tips | 24 |
| Children's Corner | 27 |
| Birthday Celebrants | 32 |
| Wedding Anniversary | 35 |
| Jezreel Valley | 36 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com,  E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான துபாய் தமிழ் திருச்சபையின் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் என் வாழ்த்துக்கள்.

மிகுந்த மலைப்போடும், ஆழ்ந்த இறை நம்பிக்கையுடனும் இந்த 8 வது மாதத்தில் கடந்து வர ஆண்டவர் அளித்த தருணத்தை எண்ணி நன்றியுடனும், மகிழ்வுடனும் அவரைப் புகழ்ந்திடுவோம். எரேமியா கூறுவது போல் நாம் நிற்பதும் நிர்மூலமாகாமல் இருப்பதும் ஆண்டவரின் அளப்பரிய இரக்கம் என்பதை நினைவுகூறும் நேரம் இது.

இம்மாதத்திற்கான தியானப்பகுதி

நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாய் இருப்போம். எபிரெயர் 3:14.

We have come to share in Christ if we hold firmly till the end the confidence we had at first. Hebrew 3:14

கிறிஸ்துவிடத்தில் பங்குள்ளவர்களாய் இருப்பது எப்படி? எபிரெயருக்கு எழுதின கடிதத்தில் இந்தக் கேள்விக்கான பதிலை அதின் ஆக்கியோன் நமக்குத் தெளிவுபட அறிவுறுத்துகிறார். ‘பங்கு’ என்ற தமிழ்ச்சொல் ஒருவரிடத்தில் நமக்கு உள்ள உரிமையையும் உறவையும் உறுதிப்படுத்துகின்ற சொல்லாகும். ஆங்கிலத்தில் இச்சொல்லை share (or) portion (or) part என்று அழைக்கலாம். சமூக வழக்கில் பெற்றோரிடத்தில் நமக்கு உள்ள பங்கு, கணவன் மனைவி இடத்தில் உள்ள பங்கு, தொழில் முனைவோரிடையே உள்ள பங்குகள், வர்த்தகத்தில் பங்குகள் என இவைகளை வகைப்படுத்தலாம். மேற்காணும் திருமறையில் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவராயிருக்க நான் என்ன செய்ய வேண்டும் என்ற வினாவிற்கு மூன்று முத்தான பதில்களை எபிரெயர் - ஆசிரியர் நமக்கு கற்றுத் தருகிறார்.

1. துளிர்விடும் நம்பிக்கை - Blooming confidence :

விசுவாச வாழ்வின் ஆரம்பத்தில் ஆண்டவர் மேல் நமக்கிருந்த நம்பிக்கை எவ்வளவு வலிமையாய் இருந்தது, அழகாய் இருந்தது, ஆழமாய் இருந்தது.

வாழ்வின் அனைத்துச் சூழல்களிலும் அனைத்து தேவைகளுக்கும் இயேசுவை மட்டுமே சார்ந்திருக்கும் அவரை மட்டுமே நோக்கிப் பார்த்து பெற்றுக் கொண்டிருந்த சிறப்புக்குரிய அனுபவம் நமது விசுவாச வாழ்வில் மிகச் சிறந்த அனுபவமல்லவா! கலாத்தியத் திருச்சபைக்கு பவுல் எழுதிய கடிதத்தில் அவர்களது துவக்ககால நம்பிக்கை வாழ்வை மிகவும் மெச்சுவதை நாம் காணலாம். 3:3 ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள்: 5:7 - நீங்கள் நன்றாய் ஓடினீர்களே. அதேபோல் திருவெளிப்பாடு 2: 4 - எபேசு திருச்சபை ஆரம்பத்தில் ஆண்டவரிடம் வைத்த அன்பை அவர்கள் விட்டு விட்டதாக யோவான் குற்றம் சுமத்துவதையும் நாம் காணலாம். நமது விசுவாச வாழ்வின் பயணத்தில் நாம் மிகவும் நன்றாக ஓடத்துவங்கினோம். அதே ஆவியுடன் உற்சாகத்துடன் நம்பிக்கையுடன் இப்போதும் இருக்கிறோமா?

### 2. தொடரும் நம்பிக்கை - continuing confidence :

விசுவாச வாழ்வின் பயணம் என்பது ஒரு குறிப்பிட்ட புள்ளியில் துவங்கி அங்கேயே முடிந்து விடுவது அல்லது நின்று விடுவது அல்ல. அந்த நம்பிக்கை தொடந்து இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

வாழ்வின் சூழல்களில் நாம் எதிர்கொள்ளும் போராட்டங்கள், குறைவுகள், பெலவீனங்கள், தோல்விகள் இவை எல்லாவற்றின் நடுவிலும் நான் நம்பியிருக்கிறவர் யார்? என்று நன்றாய் அறிந்திருக்கிறேன். அந்த நம்பிக்கை என்னைக் கைவிட்டு விடாது. அந்த நம்பிக்கையில் நான் தொடர்ந்து செல்வேன். தூய பவுலடிகளார் பிலிப்பியர் 3: 13-14,
சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை, ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.

அன்பானவர்களே நமது நம்பிக்கை - தொடர்ந்திடும் நம்பிக்கையாய் உள்ளதா ?

### 3. நீடித்திருக்கும் நம்பிக்கை - Enduring Confidence :

வியாபார உலகில் life time warranty life time guarantee என்ற யுக்தி பயன்பாட்டில் இருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். சில பொருள்களை விற்பனைக்கென்று அறிமுகம் செய்யும் பொழுது இது நீடித்து உழைக்கும் என்று உறுதிபடக் கூறுவதையும், அத்தகையப் பொருட்களை நாம் நம்பிக்கையுடன் வாங்குவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளோம்.

கிறிஸ்துவிடத்தில் நாம் பங்குள்ளவர்களாயிருக்க இந்த மூன்று படி நிலைகளும் மிகவும் முக்கியமானவைகள். நம்பிக்கை துளிர்விடத் துவங்கலாம். அதே நம்பிக்கையில் தொடர்ந்திடும் தொடர்வாழ்வு, துவங்கிய நம்பிக்கையின் பயணத்தை முடிவுபரியந்தம் காத்துக்கொள்ள முனைப்புடன் நம்பிக்கையைக் காத்துக் கொண்டால் மட்டுமே கிறிஸ்துவிடத்தில் நாம் பங்குள்ளவர்களாயிருக்க முடியும். துவக்ககால திருச்சபையின் தலைவர்கள் மற்றும் தலைவிகள் இந்த நம்பிக்கையைக் காத்துக்கொண்டு, கிறிஸ்துவின் பாடுகளிலும் மகிமையிலும் பங்குள்ளவர்களாக இடம் பெற்றார்கள். இவ்விசுவாசிகளின் பட்டியலை எபிரெயர் 11- ம் அதிகாரத்திலும், ரோமர் 16:1-5 வசனங்களிலேயும் நாம் காணலாம்.

அன்பானவர்களே இன்றைக்கு நம்முடைய விசுவாசப் பயணம் நம்பிக்கையின் பயணம் எப்படி உள்ளது. கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாக நம்மைத் தகுதிபடுத்திக் கொண்டிருக்கிறோமா?

சிந்திப்போம்! தியானிப்போம் ! செயலாற்றுவோம்!!!

ஆண்டவரின் அளவற்ற கிருபை உங்களுடன் தங்கியிருப்பதாக.

ஆண்டவரின் திருப்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# உதவி போதகர் மடல்

இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். அனுதினமும் நம்மோடிருந்து நம்மை அவரது ஜீவபாதையில் நடத்திவரும் தேவன்தாமே இந்தப்புதிய மாதத்தில் அவரது அனைத்து ஆசீர்வாதங்களையும் நாம் பெற அனுக்கிரகம் செய்வாராக. நாம் தேவனின் பாதுகாப்பைப்பெற்று வாழ்ந்து வருகின்ற இக்கால கட்டத்தில் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம். விரைவில் இந்தக் கொடிய கிருமியின் தாக்கம் நம்மைவிட்டு அகல ஆண்டவரை நோக்கி ஊக்கமாய் ஜெபிப்போம். விரைவில் நம்மிடையே இயல்புநிலை திரும்ப கர்த்தர் துணைசெய்வாராக. ஜெபிப்போம் ஜெயம் பெறுவோம்.

INVITATION - அழைப்பு 7

பரிசுத்த வேதாகமம் அழைப்புகள் நிறைந்த புத்தகம். அந்த அழைப்புகளில் சிலவற்றைத் தொடர்ச்சியாகத் தியானிக்க ஆயத்தப்பட்டோம். கடந்த 6 மாதங்களாக வேதாகமத்தில் இடம் பெற்றிருந்த சில அழைப்புகளைக் குறித்துத் தியானித்தோம். இந்த மாதம் அதன் வரிசையில் மற்றுமொரு அழைப்பைக் குறித்துத் தியானிப்போம்.

1. Invitation to Commitment - அர்ப்பணிப்புக்கான அழைப்பு
2. Invitation to Companionship - அன்பிணைப்புக்கான அழைப்பு
3. Invitation to Cleansing - அலசப்படுவதற்கான அழைப்பு
4. Invitation to Contentment - அடைவதற்கான அழைப்பு
5. Invitation to Contrition - அறிக்கையிடுவதற்கான அழைப்பு
6. Invitation to Consider - அறிமுகத்துக்கான அழைப்பு
7. Invitation to Children - அரும்புகளுக்கான அழைப்பு

இயேசுவோ, "சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள், பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" என்றார். (மத். 19:13-15)

'But Jesus said, suffer little children, and forbid them not, to come unto me: for of such is the kingdom of heaven' (Matthew 19:13-15)

அக்காலத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை யூத ரபிமார்களிடம் கொண்டுவந்து ஆசி பெற்றுக்கொள்வது வழக்கம். அதுபோல இயேசுவிடம் தங்களது குழந்தைகளைக் கொண்டு வந்தனர் பெற்றோர்கள். அவர்களை

சீஷர்கள் அதட்டுகின்றனர். உடனே அவர்களிடம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து மேற்சொன்ன வார்த்தைகளைக் கூறுகின்றார். சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வரட்டும் என்று அழைக்கிறார் ஆண்டவர் இயேசுகிறிஸ்து. இந்த வேதபகுதியில் நாம் கற்றுக்கொள்கின்ற காரியங்கள் சிலவற்றைத் தியானிப்போம்.

### 1. A word about Responsibility - கடமை பற்றிய வார்த்தை:

இந்த வேத பகுதியிலா அல்லது அதற்குமுன்போ இயேசுகிறிஸ்து சிறுபிள்ளைகளை இரட்சிக்கிறார் என்றோ, அவர்களை ஆசீர்வதிக்கிறார் என்றோ சொல்லப்படவில்லை, காணப்படவுமில்லை. ஆனாலும் அப்பிள்ளைகளின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் குறித்த அக்கறை உடையவர்களாய் இருந்தனர். பரிசுத்த வேதாகமம் மூலம் ஆண்டவராகிய கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பிள்ளைகளை வளர்ப்பதற்கான ஆலோசனைகளைக் கூறியிருக்கின்றார் (உபா.6:1-8). ஆகவே இந்தப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் குறித்த கடமையைச் சரியாக நிறைவேற்ற பிரயாசப்பட்டனர். அன்புக்குரியவர்களே! இன்றும் இதேவிதமான கடமை உணர்வோடு பெற்றோர்கள் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும். நமது பிள்ளைகளை இயேசுவினிடத்தில் கொண்டு வருவதிலே அதிக கவனம் உடையவர்களாய் இருக்கவேண்டும். இது நமது முக்கியமான கடமை. இதனை நிறைவேற்றுவதிலே அதிக கவனம் கொள்ளவேண்டும்.

### 2. A word about Redeemer - காப்பவர் பற்றிய வார்த்தை :

இந்த வேதபகுதி பெற்றோர்களின் கடமை பற்றி மாத்திரம் அல்ல, சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்துக் காக்கின்ற ஆண்டவர் இயேசுகிறிஸ்து பற்றியும் கூறுகின்றது. இயேசுவின் கனிவான உள்ளத்தை இங்கே அறிய முடிகின்றது. ஆகவேதான் அவர் சிறு பிள்ளைகளைத் தடுத்த சீஷர்களை அதட்டுகின்றார். இயேசு எப்போதுமே தம்மிடத்தில் மனிதர்கள் வருவதை விரும்புகின்றவர். அதிலும் இங்கு குறிப்பாக அவர் சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்க விரும்புகின்றார்.

அன்புக்குரியவர்களே! இன்றும் அதே ஆண்டவர் நம்மையும் நமது பிள்ளைகளையும் ஆசீர்வதிக்க ஆயத்தமாய் இருக்கின்றார்.அவரிடம் நாம் வருவதும், நமது பிள்ளைகளைக்கொண்டு வருவதும் அவசியம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மையும் நமது பிள்ளைகளையும் காத்து ஆசீர்வதிப்பார்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு.ஜான் வெஸ்லி
உதவி ஆயர் - ∴.புஜைரா.

# உதவி ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் நம்மைக் கண்மணிபோலப் பாதுகாத்து நடத்தி வந்த இராஜாதிராஜன் இயேசுதாமே, இந்தப் புதிய மாதத்திலும் நம்மைப் பாதுகாத்து நடத்துவாராக. நேற்றும் இன்றும் என்றும் மாறாத நமதாண்டவர், காலங்களின் தேவனாக இருக்கிறார். அவரது பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை. எனவே இந்தக் கஷ்டமான நாட்களில் தேவனையே தேடுவோம். அவரே நம்மை மரணபரியந்தம் நடத்த வல்லவராயிருக்கிறார். அவரையே நம்பி வாழ்வோம்.

## அறிவை அடக்கு

விவேகமுள்ள மனுஷன் அறிவை அடக்கி வைக்கிறான், மூடருடைய இருதயமோ புத்தியீனத்தைப் பிரகாசித்தப்படுத்தும். நீதிமொழிகள் 12:23

A Prudent man concealed knowledge, but the heart of fools proclaimed foolishness. Proverbs 12:23

எல்லாம் கற்றுத் தேர்ந்த குரு ஒருவர் இருந்தார். அனைத்துவிதமான காரியங்களையும் கற்றறிந்த அவர் ஒரு காட்டில் வாழ்ந்து வந்தார். ஒருமுறை ஒரு ஊரில் கூட்டம் ஒன்றில் பிரசங்கிக்க அவரைக் கூப்பிட்டிருந்தார்கள். ஆயிரம் பேருக்கு மேல் அந்தக் கூட்டத்திற்கு வருவார்கள் என்று சொல்லியிருந்தனர். அன்று அவரை அழைத்துவர குதிரைக்காரனை அனுப்பியிருந்தார்கள். அன்று பார்த்து பயங்கர மழை. அதனால் கூட்டத்திற்கு வர நினைத்தவர்கள் ஒருவரும் வரவில்லை. குரு கூட்டம் நடக்கவிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தபோது அங்கு ஒருவருமில்லை. அவரும் அவரை அழைத்து வந்த குதிரைக்காரனும் மட்டுமே இருந்தனர். கூட்டத்தில் பேசுவதற்கு நிறைய ஆயத்தப்பட்டு வந்த குருவுக்கு ஏமாற்றம். இருக்கிற ஒரு குதிரைக்காரனுக்கு பிரசங்கம் பண்ணவும் அவருக்கு மனதில்லை. என்னப்பா பண்ணலாம்னு குதிரைக்காரனிடம் கேட்டார் குரு. குதிரைக்காரனோ, “ஐயா! நானோ குதிரைக்காரன் எனக்கு அதிகம் தெரியாதுங்க. ஆனா ஒண்ணுமட்டும் எனக்குத் தெரியுமுங்க, நான் முப்பது குதிரை வளர்க்கிறேன். குதிரைகளுக்குப் புல்லு வைக்கப்போறபோது எல்லாக்குதிரைகளும் வெளியே போய் ஒரே ஒரு குதிரை மட்டும்தான் இருக்கிறதுன்னு வெச்சுக்கோங்க, அப்படின்னா நான் அந்த ஒரு குதிரைக்குப்புல் வச்சுட்டுதான் திரும்புவேன்” என்றான். குருவுக்குப் பொளேர்னு அறைஞ்சமாதிரி இருந்தது.

உடனே அந்த குதிரைக்காரனுக்கு சபாஷ் போட்டுவிட்டு அவனுக்குப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். தத்துவம், மந்திரம், பாவம், புண்ணியம், சொர்க்கம், நரகம்னு சரமாரியா பேசி பிரமாதப்படுத்திவிட்டார். கடைசியில் அந்தக் குதிரைக்காரனிடம் எப்படிப்பா என் பேச்சு எனப் பெருமையாகக் கேட்டார். அதற்கு அந்த குதிரைக்காரன், “ஐயா! நானோ குதிரைக்காரன் எனக்கு அதிகம் தெரியாதுங்க ஆனா ஒண்ணுமட்டும் எனக்குத் தெரியுமுங்க, நான் புல்லு வைக்கப்போகிற இடத்தில் ஒரு குதிரை மட்டும்தான் இருந்துச்சுன்னா, நான் அதுக்குத் தேவையான புல்லை மட்டும்தான் வைப்பேன். 30 குதிரைக்கும் தேவையான புல்லையும் ஒரு குதிரைக்கே கொட்டிட்டு வரமாட்டேன்” என்றான். குருவுக்கு பெருத்த அவமானமாகிவிட்டது.

பிரியமானவர்களே! கர்த்தர் நமக்கு ஏராளமான ஞானத்தையும், புத்தியையும் தந்திருக்கின்றார். எந்தெந்த நேரத்தில் எதனெதனைப் பேசவேண்டும் என்றும், எப்படிப் பேசவேண்டும் என்றும் கர்த்தர் நமக்கு ஞானம் தருகிறார். நமக்குத் தெரிந்த எல்லாவற்றையும் எல்லா நேரங்களிலும் வெளிப்படுத்துவது சிறப்பானதாக இருக்காது. எங்கே, எதற்கு, என்ன பேசவேண்டும் என்பதனை உணர்ந்து பேசவேண்டும். ஏனெனில் நமக்குத் தெரிந்த எல்லாவற்றையும் எல்லா இடங்களிலும் பேசுவது உகந்ததாயிருக்காது. ஞானவான்கள் புத்தியை அடக்கி வைக்கிறார்கள். எப்போது பேசவேண்டும், எதனைப் பேசவேண்டும் என்பதனை நன்கு உணர்ந்து பின்பு பேசவேண்டும். நமது பேச்சு நன்மையை வருவிக்கிறதாய் இருக்கவேண்டுமே தவிர, தீமையை வருவிக்கிறதாய் இருக்கக்கூடாது. எனவே நம் அறிவை ஞானமாய் பயன்படுத்துவோம். நமது சொற்கள் இயல்பானதாகவும், இனிமையானதாகவும் இருக்கட்டும். சொற்களை கவனமாய் வெளிப்படுத்துவோம், ஞானமாய் செயல்பட்டு அனேகருக்கு ஆசீர்வாதமாய் வாழ்வோம்.

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி. ஏஞ்சலின் ரூபா ஜான் வெஸ்லி
உதவி போதகரம்மா - ∴.புறைஜரா.

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபை அங்கத்தினர்
Mr. Jacob Samuel அவர்களின் தாயார்
Mrs. Premalatha Jayakumar அவர்கள் கடந்த 29-07-2020 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# உதவி போதகர் மடல்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கு மகிமையுண்டாவதாக.

இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். 2020-ம் வருடமாகிய இவ்வருடத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்நாள்வரையிலும் நம்மைப் பாதுகாத்து வந்தார். இயேசுநாதரை ஸ்தோத்தரிப்போம். புதிய மாதமாகிய ஆகஸ்ட் மாதத்தின் ஒவ்வொரு நாளும் கர்த்தர் உங்களுடன் இருந்து பாதுகாத்து, சுகம் பெலன் அருளி, பணிவிடைகளில் உயர்வு தந்து, சமாதானம், சந்தோஷத்துடன் வாழ்வதற்கு கிருபை புரிவாராக. திருமறை வசனம் உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

திருமறைப்பாடம்: சங்கீதம் 121 தியானவசனம்: சங்கீதம் 121:1

"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக
என் கண்களை ஏறெடுக்கிறேன்"

I lift up my eyes to the hills - where does my help come from?

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பக்தியுள்ள ஒவ்வொரு யூதனும் தன் வாழ்நாளில் ஒருமுறையாவது எருசலேமுக்குப் புனித யாத்திரை செல்வார்கள். செல்லும் பாதையில் வெப்பம், தாகம், பசி, சுகவீனம், விபத்து, திருடரின் தாக்குதல் போன்ற பல அபாயங்களைச் சந்திக்க நேரிடும். இரவு நேரங்களிலே தங்குமிடங்களில், கொள்ளையரிடமிருந்து தங்களைப் பாதுகாக்க, சுற்றியுள்ள மலைகளில் காவலுக்கு ஆட்களை நிறுத்தி வைப்பார்கள். இந்த அனுபவத்தைப் பின்னணியாகக் கொண்டுதான் சங்கீதம் 121 எழுதப்பட்டுள்ளது. இது புனித யாத்திரை சங்கீதங்களில் ஒன்று.

இந்த சங்கீதத்தின் மையக்கருத்து கர்த்தர் பாதுகாக்கிறார் என்பதாகும். இந்தச் சங்கீதத்தில் "காப்பாற்றுதல்", "பாதுகாத்தல்" என்னும் வார்த்தைகள் குறிப்பிடத்தக்கதாகும். இந்த சங்கீதத்தின் வசனங்களிலிருந்து கர்த்தர், தம் மக்களை பாதுகாப்பதைப் பற்றித் தியானிப்போம்.

### a. கர்த்தர் நம்மைக் கவனமாய்க் காக்கிறார் (சங்கீதம் 121:1-5)

சங்கீதம் 121:4 "இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை". "...He who keeps Israel shall neither slumber nor sleep."

சங்கீதக்காரர், தனது உதவி கர்த்தரிடமிருந்து வருவதையும், தான் அவரையே சார்ந்து வாழ்வதையும் ஒப்புக்கொள்கிறார். கர்த்தரை முற்றிலும் சார்ந்து வாழ்வதற்கு இரண்டு காரணங்கள் காணப்படுகிறது.

1. கர்த்தர் சிருஷ்டிகர்
2. கர்த்தர் உடன்படிக்கையைக் காப்பவர்

கடவுள் நம்மைக் காப்பது நமது தகுதியின் அடிப்படையிலோ, அந்தஸ்தின் அடிப்படையிலோ அல்ல. ஆகவே... "கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" என்று கூறப்பட்டுள்ளது. "கர்த்தர் உன்னைக் காக்கிறவர்" என்னும் வார்த்தைகளைக் கவனிக்கும்போது, அவர் தமது மக்களைக் கவனமாக விழிப்புடன் பாதுகாக்கிறார். அவருடைய பாதுகாப்பு உடனடியானதும், நேரடியானதுமாகும். நமக்கு எப்போதும் உதவி செய்ய ஆயத்தமாக நம்மேல் தமது கண்களைப் பதித்தவராய் எப்போதும் நமக்கு அருகிலிருக்கிறார்.

சங்கீதம் 121:3-ல் "உன் காலைத் தள்ளாடவொட்டார், உன்னைக் காக்கிறவர் உறங்கார்" எனப் பார்க்கின்றோம். ஒருவர் தன் வாழ்க்கையில் தடுமாற்றமடைந்து, குழப்பம் அடையும்போது அவர் தம் கரத்தை நீட்டி, நம்மை நிலைநிறுத்துகிறார். துன்மார்க்கர் "சறுக்கலான இடங்களில்" நிறுத்தப்படுகிறார்கள் என்று சங்கீதம் 73:18-ல் வாசிக்கிறோம். ஆனால் நமது பிள்ளைகளின் கால்களை சறுக்காதபடி தேவனே காத்துக்கொள்கிறார். நாம் செயலிழந்து பயனற்றவர்களாய் போகாதபடி நம்மைக் காக்கிறார். கர்த்தர் நம்மைக் கவனமாய் பாதுகாப்பார் என்ற இறைநம்பிக்கையுடன் வாழ்வோம்.

### b. கர்த்தர் நம்மை எல்லா வேளைகளிலும் காக்கிறவர் (சங்கீதம் 121:6-8)

சங்கீதம் 121:6 "பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை." "The sun shall not strike you by day. Nor the moon by night."

"பகல்" என்பது நாம் நமது காரியங்களை விழிப்புடன் செய்து கொண்டிருக்கும் வேளையைக் குறிக்கிறது. "இரவு" என்பது நாம் செயலிழந்தவர்களாக இருக்கும் வேளையைக் குறிக்கிறது. நாம் பெலமுள்ளவர்களாய் இருக்கும்போதும் நம்மைக் காக்கிறார். பெலவீனமுள்ளவர்களாய் இருக்கும்போதும் நம்மைக் காக்கிறார். பகலின் அபாயங்களிலிருந்தும், இரவின் அபாயங்களிலிருந்தும் கர்த்தர் நம்மைக் காக்கிறார்.

நம்முடைய அனுதின செயல்களிலும், வேலைகளிலும், சாதாரண சூழ்நிலைகளிலும், அசாதாரண சூழ்நிலைகளிலும் கர்த்தர் நம்மைக் காக்கிறார். நாம் வெளியே செல்லும்போது, எதைச் சந்திக்கப் போகிறோமென்று தெரியாமல் செல்கிறோம். அப்போதும் கர்த்தர் நம்மைக் காக்கிறார். நமக்கு அனுபவமோ, அறிமுகமோ இல்லாத சூழ்நிலைகள் நம்மைப் பயத்தில் ஆழ்த்தி விடுகின்றன. வாழ்க்கையின் பழக்கமான அனுபவங்களிலும், பழக்கமில்லாத அனுபவங்களிலும் ஆண்டவர் நம்மைக் காக்கிறார் (சங்கீதம் 21:8).

நம்மைப் பாதுகாக்கின்ற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடம் நம்மை ஒப்படைப்போம். நம்மைக் கண்மணி போல ஒவ்வொரு நாளும் பாதுகாப்பார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர் - RAK.

# உதவி ஆயரம்மா மடல்

ஆண்டவர் இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தர் நம்மை அற்புதமாய் இந்நாள்வரையிலும் அவரது செட்டையின் மறைவில் வைத்து பாதுகாத்து வந்ததை நினைத்து ஸ்தோத்தரிப்போம். புதிய மாதத்தில் கர்த்தருடைய பாதுகாப்பான நடத்துதலுக்காக அனுதினமும் ஜெபிப்போம்.

## தியத்தீரா சபை

திருமறைப்பாடம்: வெளி. 2:18-29 தியான வசனம்: 2:25

“உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்”

தியத்தீரா துருக்கியின் மேற்கு பகுதியில் பெர்கமுவிற்கும், சர்தைக்கும் இடையில் அமைந்துள்ள பட்டணம். ஏழு சபையின் நகரங்களுள் மிகவும் சிறியதும், முக்கியத்துவம் குறைந்ததுமான நகரம் தியத்தீரா. மிக முக்கியமான வியாபார சாலைகள் இந்நகரின் வழியே செல்வதால் அனைவராலும் அறியப்படுகின்ற நகரமாக விளங்கியது. கம்பிளி வியாபாரமும், சாயத்தொழிற்சாலையும் இந்நகரில் சிறந்து விளங்கியது. தூய பவுல் அப்போஸ்தலர் 16:14-வது வசனத்தில் கூறப்பட்டுள்ள இரத்தாம்பரம் விற்கிற லீதியாள் இந்நகரைச் சார்ந்தவள். பிற நகரங்களைவிட இங்கு வியாபாரச் சங்கங்கள் அதிகம் காணப்பட்டன.

### தியத்தீரா சபைக்கு கர்த்தரின் வெளிப்பாடு (வெளி.2:18):

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தியத்தீரா சபையின் தூதனுக்கு எழுத வேண்டியதை வெளிப்படுத்துகிறார். அக்கினி ஜுவாலை போன்ற கண்கள், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் கண்கள் அக்கினிஜுவாலை போல பிரகாசமாயிருக்கிறது. எல்லா நபர்களையும், எல்லாக் காரியங்களையும் கிறிஸ்துவின் பிரகாசமான கண்கள் ஊடுருவிப் பார்க்கும். கர்த்தருடைய பாதங்கள் நிலையானது, உறுதியானது, மாற்றமில்லாதது, பாவத்துக்குத் துணைபோகாதது. கிறிஸ்து தம்முடைய நீதியில் நிலைத்து நிற்கிறவர் என்பதை கற்றுத்தருகிறது.

### தியத்தீரா சபையின் நற்குணங்கள் (வெளி. 2:19)

- நற்கிரியை செய்தார்கள்
- அன்பை காத்துக்கொண்டனர்
- உண்மையாய் ஊழியம் செய்தார்கள்
- விசுவாசத்தில் உறுதியாயிருந்தனர்
- பொறுமையோடு காத்திருந்தனர்
- நாளுக்கு நாள் அதிகமாய் கிரியை செய்த சபை

### தியத்தீரா சபையின் குறைகள் (வெளி. 2:20)

- பாவ வழிகளில் திரும்பிக்கொண்டிருந்தனர்
- விக்கிரகங்களுக்குப் படைத்தனவற்றை புசித்தனர்
- யேசபேலின் தீய போதனைகளுக்கு இடம்கொடுத்தனர்

### தியத்தீரா சபைக்கு கர்த்தரின் எச்சரிப்பு (வெளி. 2:21-23)

யேசபேல் என்னும் பெண் தியத்தீரா சபை மக்களை தவறான போதனைக்கு வழிநடத்தினாள். அவள் தன் தவறை உணர்ந்து மனம்திரும்ப தவணை கொடுக்கப்பட்டது (வெளி.2:21). கர்த்தர் கிருபை மேல் கிருபை கூறுகிறவர். பலமுறை மனம் திரும்ப தருணம் கொடுக்கப்படுகிறது. மனம் திரும்பாத பட்சத்தில் யேசபேலின் போதனைகளைப் பின்பற்றுகிறவர்களையும், யேசபேலையும் உபத்திரவத்திலே தள்ளுவேன் என்று எச்சரிக்கிறார். இவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புவதால் (யோவான் 3:19) ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாகிறார்கள்.

### தியத்தீரா சபைக்கு கர்த்தரின் வாக்குத்தத்தம் (வெளி. 2:26-28):

ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு "ஜாதிகள் மேல் அதிகாரம்" தருவேன் என கர்த்தர் கூறுகிறார் (வெளி.2:26-27, சங்.2:9). மேலும் "விடிவெள்ளி நட்சத்திரத்தையும் கொடுப்பேன்" (வெளி.2:28) என வாக்குரைக்கிறார். வெளி. 22:16-ல் "நான் பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாய் இருக்கிறேன்" என கர்த்தர் உரைக்கிறார்.

கிறிஸ்துவில் அன்பானவர்களே ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய கிரியைகளின்படியாக கர்த்தர் பலனளிப்பார் (ரோமர் 2:6). ஆகவே முடிவுபரியந்தம் உண்மையாயிருந்து இயேசுவின் கிரியைகளை நம் வாழ்வில் பிரதிபலித்து வாழ தியத்தீரா சபை கற்றுத்தருகிறது. முடிவு பரியந்தம் கிறிஸ்துவின் கிரியையில் நிலைத்து வாழ கர்த்தர் துணைபுரிவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. J.விஜிலா ராணி
உதவி ஆயரம்மா - RAK.

# செயலர் மடல்

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நம்மை நல்மேய்ப்பராய் உடனிருந்து அதிசயமாய் வழிநடத்தி, பாதுகாத்து நடத்திவரும் நம் திரியேக தேவனுக்கு மகிமையையும், கனத்தையும் செலுத்துகிறேன்.

கடந்த மாதத்திலும், இம்மாதத்திலும் நம் திருச்சபையின் அனைத்து நிகழ்வுகளும் (Friday Service, Cell Prayers, Junior Church, Camp Ministries, Ladies Ministry) online மூலமாய் கர்த்தரின் மேலான கிருபையால் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

July மாதம் முதல் நம் Chapliancy வழிகாட்டுதலின்படி நம்முடைய திருச்சபை ஜெப ஒழுங்குகள் பலவித பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் கடைபிடிக்கப்பட்டு கர்த்தரின் மேலான கிருபையால் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சபையாருக்கு மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். நம் சபை போதகர் அறிவித்தவண்ணம், சபையார் யாரேனும் தற்போது உள்ள இக்கட்டான சூழலில் அவதிப்பட்டால், தயவுசெய்து நம் சபை போதகர் அவர்களை தயக்கமின்றி அணுக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த July மாதத்தில் நம் Junior Church Retreat எல்லா வெள்ளிக் கிழமைகளிலும் சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டு நிறைவேறியது. இதில் பங்குபெற்ற அனைத்து பிள்ளைகளையும் கர்த்தரின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன். இதற்காக தங்கள் கடின உழைப்பை வழங்கிய JC Superindent, Teachers மற்றும் Volunteers-க்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கடினமான கட்டுப்பாடான நேரத்திலும் என்னோடே கூட online ஒளிபரப்பை நடத்த உதவும் அனைவருக்கும் கர்த்தரின் நாமத்தினாலே நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Corona Virus-ஆல் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்காகவும், வேலை இழந்தோர், சம்பளம் இன்றி தவிப்போர் மற்றும் பல இக்கட்டான சூழ்நிலைகளில் சிக்கித் தவிப்போரை சபையார் தங்கள் தனிப்பட்ட குடும்ப ஜெபங்களில் நினைவுகூற அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் நம்முடைய வாழ்விலும், திருச்சபை ஊழியங்களிலும் இயல்பான நிலைமை மாற, நம் தேவாதி தேவனை நோக்கி ஊக்கமாய் நம் வேண்டுதல், விண்ணப்பங்களைச் செலுத்துவோம். நம் தேவாதி தேவன் நம்மை எல்லாவித இக்கட்டுகளிலிருந்தும் விலக்கிக் காத்து, செவ்வையான பாதையிலே வழிநடத்துவார். ஜெபமே ஜெயம்.

Babu Jeyaseelan, Secretary.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்." 1தீமோத்தேயு 6:7,8.

சென்ற மாத தொடர்ச்சி...
புண்ணியம் தரும்
புனிதமான
பைபிள் சொல்லும்
வாழ்க்கை
நெறிமுறைகளை
மனிதன்...
மறக்கலாமா...
மனம் போன
போக்கில்
நடக்கலாமா...
உலகியல் ஆசைகளை
உள்ளுக்குள்ளே
வைத்துவிட்டு
பேராசையுடன்
வாழலாமா...
உண்ண உறங்க
உரையாட உறவாட
நேரம் இல்லாது
பணம்... பணம்.. என்று
கோடி கோடியாய்
சேர்த்தாலும்
மாடி வீடு கட்டி
வாழ்ந்தாலும்
ஏக்கம் தீர்ந்ததா..!
தூக்கம் வந்ததா...
மகனே...
நிலையில்லாத
ஒன்றுக்கு
விலைகொடுத்து
அலைபாயலாமா
இன்று...
உலகில்...
"கொரோனா"
நோய்தொற்று
பெருகும் போதும்
பெரும் துன்பம் வந்து
உறுத்தும் போதும்
ஆசை... பேராசை...
தேவையா...
காலம்
உணர்த்துவது
தெரியவில்லையா...
"கர்த்தரின்
பாதம் பணிவதே
நமது கடன்"
உணர்கிறீர்களா...
உலகில்
உயிர்வாழ
உணவும்
உடையும் - நம்
தேவை அறிந்து
இயேசு அருள்வார்
அந்த...
போதுமென்ற
மனம் கொண்டவர்
எவரோ... அவரே...
பெரும் செல்வந்தர்
அலட்டிக்கொள்ளாது
வாழ்வது அருமை
உள்ளதை வைத்து
அனுபவித்து
வாழ்வது பெருமை
உணர்ந்தீர்களா...
மனதை
ஒருமைப்படுத்தி
இயேசுவின்
பெருமையும்
இயேசுவைப்
பற்றிய
ஞானமும் பெற்று
உலகியல் பற்று
இல்லாது...
மற்று எதனிடமும்
காட்டப்படாமல்
இயேசுவிடம்
மட்டும்
காட்டப்படும்
"விஷேச அன்பே"
பக்தி எனப்படும்.
இத்தகைய மெய்யான
பக்தியால்தான்
பரம் அடையும்
பலன் கிடைக்கும்
அல்லாது...
உலகம் தந்த
எதுவுமே கூடவே
வராதுகாண்
ஆசையை மிதி
கர்த்தரை துதி
இது ஒன்றே நமக்கு
நற்கதி. நிறைவுறும்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# அறிந்து கொள்வோம்!

பெந்தெகொஸ்தே பண்டிகை (லேவியராகமம் 23:15-21 & அப். 2)




நமது திருச்சபையின் 40-வது ஆண்டு கொண்டாட்டத்தை நினைவுகூறும் நாம் நமது வேதாகமத்தில் கொண்டாடப்பட்ட கர்த்தருடைய பண்டிகைகளைக் குறித்து தியானித்துக்கொண்டிருக்கின்றோம். அதன் வரிசையில், இம்மாதம் நாம் தியானிக்க இருக்கும் பண்டிகை பெந்தெகொஸ்தே பண்டிகை.

பெந்தெகொஸ்தே என்னும் வார்த்தை கிரேக்க வார்த்தையான Πεντηκοστή (*Pentēkostē*) என்னும் வார்த்தையிலிருந்து வந்ததாகும். இதன் பொருள் "ஐம்பதாம்" (fiftieth) என்பதாகும். பெந்தெகோஸ்தே பண்டிகை என்றவுடன் நம் நினைவுக்கு வருவது புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள மேலறைவீட்டு சம்பவமே. பரிசுத்த ஆவியானவர் அக்கினி மயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்ட சம்பவம் நம் நினைவுக்கு வரும். ஆம்... அது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு பின் ஐம்பதாவது நாள் கொண்டாடப்படும் பரிசுத்தத் திருநாள் ஆகும். இது வெள்ளை ஞாயிறு (White Sunday) அல்லது விட்சன்டே (Whitsunday) அல்லது விட்சன் (Whitsun) என்றும் அழைக்கப் படுகிறது. இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் இந்த ஞாயிறைத் தொடர்ந்து வரும் திங்கட்கிழமையையும் விடுமுறையாக அறிவித்து கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். கிழக்கத்திய நாடுகளில் பெந்தெகோஸ்தே, ஈஸ்டர் பண்டிகை நாட்களை பெந்தெகோஸ்தே உள்ளடக்கியதைக் குறிக்கலாம். எனவே வழிபாட்டு நூல்களைக் கொண்ட புத்தகம் "பெந்தெகோஸ்டேரியன்" (Pentecostarion) என்று அழைக்கப் படுகிறது. இது ஈஸ்டர் தேதியைப் பொறுத்தது என்பதால், பெந்தெகோஸ்தே ஒரு "நகரக்கூடிய விருந்தாகும்". (moveable feast). ஆனால் இது பழைய ஏற்பாட்டின் காலத்தே கொண்டாடப்பட்ட ஒரு பண்டிகையாகும். இது பஸ்காவுக்குப் பிறகு ஐம்பதாம் நாளில் கொண்டாடப்படும் பண்டிகையையும் குறிக்கிறது. இது "வாரங்களின் பண்டிகை" 'Feast of weeks' என்றும் யூத அல்லது ரபினிய பாரம்பரியத்தில் "ஐம்பது நாட்கள் விருந்து" 'Feast of 50 days' என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த பண்டிகையின் போது, பண்டிகையைக் கொண்டாடுபவர் ஒரு மரக்காலில் பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட அசைவாட்டு காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களைத் தங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டு வந்து, அப்பத்தோடேக்கூட கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக் குட்டிகளையும், ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் செலுத்தி, வெள்ளாடுகளில் ஒரு கடாவைப் பாவ நிவாராணப்பலியாகவும், ஒரு வயதான இரண்டு ஆட்டுக் குட்டிகளையும், சமாதான பலியாகவும் இடக்கடவீர்கள். அவைகளை ஆசாரியன் முதற்பலனாகிய அப்பத்தோடும், இரண்டு ஆட்டுக்குட்டிகளோடும் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டக்கடவன். கர்த்தருக்குப் பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையவைகளாகும். அந்த நாள் உங்களுக்குச் சபை கூடும் பரிசுத்த ஓய்வுநாள் என்று கூறவேண்டும். அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக் கூடாது. இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் தலைமுறைதோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை என்றார்.



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, பண்டிகைகள் பலவற்றை நாம் கொண்டாடி மகிழ்ந்தாலும், உள்ளத்தில் பரிசுத்தமாக, கர்த்தருக்குப் பிரியமாக, அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டவர்களாக வாழாவிட்டால்... நாம் அந்த பரலோக ராஜ்யத்தைச் சேரவும் முடியாது, அவருடன் போஜனம் பண்ணவும் முடியாது. நாம் அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டவர்களாகி, அவருடைய வழிகளில் வலது, இடதுபுறம் சாயாமல், நேராகச் செல்வோமேயாகில் அந்த நித்திய ராஜ்யத்தில் பங்குள்ளவர்களாவோம். அவருடன் நித்திய நித்திய காலமாக வாழும் சிலாக்கியத்தைப் பெறுவோம். இவ்வுலக வாழ்க்கை கொஞ்ச காலம் தான். ஆகவே இவ்வுலக வாழ்வுக்காக, அவ்வுலக வாழ்வை இழந்திடாது அவருக்காக வாழ்வோம். தேவன்தாமே நம் அனைவரையும் அந்த பரலோக ராஜ்யத்திற்குப் பங்குள்ளவர்களாக மாற்றுவாராக. ஆமென்!

தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

# திருச்சபை ஜெபநாள் 02-08-2020 (முதல் ஞாயிறு)

"என் இரட்சிப்பின் தேவனாகிய கர்த்தாவே, இரவும் பகலும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்." சங்கீதம் 88:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- கர்த்தருடைய கிருபையால் காணொளி காட்சி மூலம் JC Retreat, நமது திருச்சபை ஆராதனைகள் வெகுசிறப்பாக நடைபெறவும், July 8–ம் தேதி முதல், வாரம் 3 ஆராதனைகள் ஆலயத்தில் 60பேர் அளவில், 30 நிமிடங்கள் நடைபெறவும் கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக நன்றி கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- கொரோனா பாதிப்புகளிலிருந்து கர்த்தர்தாமே யாவரையும் பூரணமாய் விடுவித்து பாதுகாத்து நடத்திட தொடர்ந்து ஜெபிப்போம்.

"என் விண்ணப்பம் உமது சமூகத்தில் வருவதாக,
என் கூப்பிடுதலுக்கு உமது செவியைச் சாய்த்தருளும்." சங்கீதம் 88:2

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# ராகேல்

ராகேல் என்பதற்குச் "செம்மறி ஆடு" எனப் பொருள்படும். அவள் ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாயிருந்தாள். தேவன் ராகேலை இஸ்ரவேல் என்னும் தமது வீட்டைக் கட்ட பயன்படுத்தினார்.

### 1. கடின உழைப்பாளி:

ராகேல் தன் தந்தையின் கட்டளைக்குக் கீழ்படிந்து ஆடுகளை மேய்த்து தண்ணீர் காட்டுகிறாள். ராகேலைப் போல நாமும் உழைக்கத் தயங்கக் கூடாது. நம் அன்றாட வாழ்வில் நமக்குத் தரப்பட்ட பணி, பொறுப்புகள் ஏராளம். எந்த வேலையாயினும் பிரதிபலன் உண்டு. நம் சிருஷ்டிகராம் தேவன் நிலத்தைப் பண்படுத்தவும், காக்கவும் முதல் மனிதனுக்குப் பணித்தார். நமது அருமை நேசரின் பாராட்டுதலையும், பரலோக பிரகாசமான வாழ்வை எண்ணிப் பார்த்து மகிழ்வுடன் பணியாற்ற வேண்டும்

### 2. தேவ சித்தத்தை நிறைவேற்ற துணை நின்ற ராகேல்:

ராகேல் யோசேப்பைப் பெற்ற பிறகு, தேவ சித்தத்தைத் தெளிவாய் அறிந்த யாக்கோபு தன் மனைவிகளிடம் அதைக் கூறினான். யாக்கோபுக்கு ராகேலும், லேயாளும் துணை நிற்காமல் இருந்திருந்தால் அவர்கள் சந்ததியார் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமியைச் சுதந்தரித்திருக்க மாட்டார்கள். நம் குடும்பத்தில் தேவனது சித்தம் நிறைவேற விட்டுக்கொடுத்து செயல்பட வேண்டும். இப்பொழுது எல்லாம் நன்றாகத்தானே இருக்கிறது, ஏன் இன்னொரு புதிய பாதை என ஏற்கத் தயங்காமல் தேவன் சொன்னபடி செய்தால் குடும்பத்திற்கும் உலகத்திற்கும் ஆசீர்வாதமாய் இருப்போம்.

### 3. பிரச்சனையில் ராகேலின் அணுகுமுறை:

ராகேலுக்குப் பிள்ளையில்லாதிருந்தது. பிள்ளைக்காக தேவனிடம் போய் விண்ணப்பம் பண்ணாமல், தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டாள். தன் கணவனிடம், "எனக்குப் பிள்ளைக் கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன்"(ஆதி 30:1) என கோப வார்த்தைகளைப் பேசினாள். அதோடு நின்று விடாமல் தன் வேலைக்காரியையே புருஷனுக்குக் கொடுத்தாள். அவளால் பிள்ளை கிடைத்தபோது "மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி மேற்கொண்டேன்" என்றாள். வயல்வெளியிலிருந்து ரூபன் தூதாயீம் பழங்களைக் கொண்டு வந்தபோது, கர்த்தரின் மேல் நம்பிக்கை வைக்காமல் அதைச் சாப்பிடுவதின் மூலம் குழந்தை கிடைக்கும் என நம்பினாள். அந்த சூழ்நிலையிலும் லேயாளே கர்ப்பவதியானாள். சிக்கல்கள் நிறைந்த உலக வாழ்வில் பிரச்சனைகளுக்கு சர்வ வல்ல ஆண்டவரிடம் தீர்வு காணச் சென்றால் குடும்பத்தில் சந்தோஷமும், நல்ல உறவுகளும் நீடிக்கும். உண்மையில் ராகேலின் பிரச்சனைக்குப் பரிகாரம் தேவனிடமே இருந்தது. "தேவன் ராகேலை நினைத்தருளினார்... அவள் கர்ப்பம் தரிக்கும்படிச் செய்தார்"(ஆதி 30:22).

### 4. யாக்கோபை ஆசீர்வதிக்க விரும்பிய ராகேல்:

தன் கணவன் யாக்கோபை ஆசீர்வதிப்பவரும், தங்கள் குடும்பத்தின் சுதந்தரமாக விளங்குபவரும் யெகோவா என்னும் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் என்பதை ராகேல் மறந்து விட்டாள். குறுகிய சிந்தையுடன், உலக எண்ணங்களுடன் தகப்பனின் விக்கிரகங்களைத் திருடி எடுத்துக் கொண்டாள். குடும்ப வழிபாட்டு விக்கிரகங்களைப் பெற்றுக்கொண்டவர் சொத்துக்கு உரிமையுடையோராகின்றனர். தகப்பனிடமும் பொய் கூறினாள். புருஷனை அறியாமல் செய்த இந்த காரியத்தால் யாக்கோபிற்கும் லாபானுக்கும் மனஸ்தாபம் ஏற்படக் காரணமானது. ஆசீர்வாதத்திற்குப் பதில் சாபத்தைப் பெற்றாள். தான் விரும்பி எடுத்த சுரூபங்கள் கானான் வந்தபின் புதைக்கப்பட்டன. நமது குடும்பத்தாரின் ஆசீர்வாதத்திற்காகச் சரியான பாதையை விட்டு விலகுவது தேவனை விசனப்படுத்துவதாகும். "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்"(நீதி 28:20).

### 5. சாப வார்த்தைகளும் ராகேலும்:

தனக்குப் பிள்ளையில்லாததைக் கண்ட ராகேல் "எனக்கு பிள்ளைக் கொடும் இல்லாவிட்டால் நான் சாகிறேன்" என்றாள். அவள் பிள்ளைப் பேறே அவளுக்கு சாவாய் அமைந்தது. தனது இரண்டாவது மகனின் பிறப்பின்போது அவள் மரித்துப் போனாள். யாக்கோபுக்குத் தெரியாமல் சுரூபங்களைத் திருடிய ராகேலின் செயலை அறியாமல் யாக்கோபு, "யாரிடம் உம்முடைய தெய்வங்களைக் கண்டுபிடிக்கிறீரோ, அவனை உயிரோடே விட வேண்டாம்" என லாபானிடம் கூறிய சாப வார்த்தையும் பலித்தது. யாக்கோபின குடும்பத்தில் முதலில் மரித்தது ராகேல் தான். "மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கிறது" (நீதி 18:21). நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்.

